10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 337 வியாழக்கிழமை 26 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## நல்லூரில் மே தினம்

யாழ்ப்பாணம், ஏப்.26

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைந்து நடத்தும் தொழிலாளர் தின எழுச்சி நிகழ்வு நல்லூர் கிட்டு பூங்கா வளாகத்தில் எதிர்வரும் மே முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை 06 ▶

## ஈ.பி.டி.பியிடமிருந்து ஸ்ரீதரை மீட்டுத் தருக

### உரிமையாளர்கள் வழக்கு

யாழ்ப்பாணம், ஏப்.26

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியால், பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டு, தற்போது அந்தக் கட்சியின் தலைமையகமாக இயங்கும் ஸ்ரீதர் திரையரங்கை மீட்டுத் தருமாறு, குறித்த திரையரங்கின் உரிமையாளர்கள் யாழ் நீதிமன்றில் 06 ▶

## ஐ.தே.க வுக்கு புதியவர்கள்

கொழும்பு, ஏப்.26

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கான உறுப்பினர்கள் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் புதிய பொதுச் செயலாளராக அமைச்சர் அகில விராஜ் காரியவசம், தவிசாளராக அமைச்சர் கபீர் ஹசீம் , தேசிய அமைப்பாளராக நவீன் திஸாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸவும், உப தலைவராக ரவி கருணாநாயக்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பதவிகள் தொடர்பில் இறுதி தீர்மானம் ஒன்றை எட்டுவதற்காக அதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட அரசியல் சபை நேற்று மாலை அலரிமாளிகையில் கூடியது.

இதன்போதே, இந்தப் பதவிகளுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# கைதான தமிழர்களை அடித்துக் கொன்றோம்

## இராணுவ அதிகாரி ஒப்புதல்

கொழும்பு, ஏப்ரல் 26

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில், கைது செய்து விசாரணைக்காக கொழும்புக்கென அழைத்து செல்லப்பட்ட ஏராளமான தமிழர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்குமான செயற்றிட்டம் என்ற அமைப்பு அதிர்ச்சித் தகவலை ஆதாரத்தோடு தெரிவித்துள்ளது.

கொழும்பு கொண்டு செல்லப்படும் தமிழர்களை வயரால் 06 ▶



## எழிலன் உட்பட மூவரின் ஆட்கொணர்வு மனு நிராகரிப்பு

வவுனியா, ஏப்.26

"விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரான எழிலன் உட்பட இறுதிப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று ஆட்கொணர்வு மனுக்களை முல்லைத்தீவு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அந்த வழக்குகளின் விசாரணை அறிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, குறித்த வழக்குகள் எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

இறுதிப் போரின்போது, சரணடைந்து காணாமல் போயுள்ளவர்களில் 14 பேர் தொடர்பில் இரண்டு தொகுதிகளாக அவர்களுடைய உறவினர்களால் வவுனியா மேல் 06 ▶



## மகிந்தவுக்கு மீண்டும் அரசின் தலைமை?

கொழும்பு, ஏப்.26

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் அரசாங்கத்தின் தலைமைக்கு வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார். 06 ▶



## கேப்பாபிலவு காடு நேற்றும் பற்றியெரிவு

முல்லைத்தீவு, ஏப்.26

கேப்பாபிலவு படைமுகாமை அண்மித்த பகுதியில் உள்ள தேக்கங்காட்டு வனப்பகுதி நேற்று மதியமும் காட்டுத்தீயால் பற்றியெரிந்துள்ளது.

கடும் வெயில் காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது. இந்தத் தீவிபத்தினால் 25 ஏக்கர் வரையான தேக்கங்காடு எரிந்து நாசமானது. தீ விபத்தினை அடுத்து அந்த 06 ▶

## 2020க்குள் தீர்வு

### அமைச்சர் பௌஸி ஆரூடம்

யாழ்ப்பாணம், ஏப்.26

"நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 2020க்குள் நல்ல தீர்வினை முன்வைக்கும். அதற்கான ஆலோசனைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது" என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி தெரிவித்தார். 06 ▶

## வடக்கு அமைச்சர்கள் மீது மோசடிக் குற்ற விசாரணை

### உத்தரவிட்டார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஏப்.26

வடக்கு மாகாண அமைச்சரவை மீது முன்வைக்கப்பட்டுள்ள மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, உண்மை நிலை தொடர்பில் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே உத்தரவிட்டுள்ளார். 06 ▶

## முள்ளிவாய்க்கால் நினைவாலயத்துக்கு தடை



யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதற்கு இடைக்கால தடை விதித்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உயர் மட்டத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

வன்னி இறுதிப் போரின் போது உயிரிழந்த பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் உறவுகள் 06 ▶



# பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சாவகச்சேரியில் நேற்று கவனவீர்ப்பு!

சாவகச்சேரி, ஏப்.26

கடமை நேரத்தில்பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கபட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ். சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று முற்பகல் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது “கடமைக்கு இடையூறு செய்யாதே”, “எமது உயிருக்கு உத்தரவாதம்என்ன?”, ”உத்தியோகத்தர்மீதான தாக்குதல் தொடர்கதையா” , ”மக்கள் சேவகர்களான எமக்கு மக்களிடமே பாதுகாப்பு இல்லையா” போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

குறித்த உத்தியோகத்தர் நாவற்குழி பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வெளிக்களப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அங்கிருந்த சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், தலையில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ-4)

## இறப்பர் தொழிற்சாலை விபத்து: முகாமையாளரின் மறியல் நீடிப்பு

ஹொரணை,ஏப்.26

ஹொரணை இறப்பர் தொழிற்சாலையில் ஐவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட முகாமையாளர் உட்பட இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஹொரணை இறப்பர் தொழிற்சாலையின் முகாமையாளர் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வாள்ர் ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள்இருவரும் ஹொரணை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே, பதில் நீதவான் சந்தன விஜேசூரிய இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த 19 ஆம் திகதி, குறித்த தொழிற்சாலையில் உள்ள அமோனியா தாங்கிக்குள் விழுந்து ஐவர் உயிரிழந்தனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் நோய்வாய்ப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## மாணவர்களின் தற்கொலை வீதம் அதிகரிப்பு

கொழும்பு ,ஏப்.26

நாடளாவிய ரீதியில் ஆண்டு தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்த விடயம் வெளிவந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் வீதம் தற்போது சடுதியாக அதிகரித்துள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டில் 137 மாணவ , மாணவியர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களில் 69 மாணவியரும், 68 மாணவர்களும் அடங்குவர். இவர்களில் 64 பேர் 8 வயதுக்கும் 16 வயதுக்கும் உட்பட்டவர்கள் ஆவார்.

மேலும், 17 முதல் 20 வயது வரையிலான 64 மாணவ, மாணவியரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இதேவேளை, 2016ஆம் ஆண்டில் 120 பாடசாலை மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## கனடா விபத்தில் இலங்கைப் பெண் பலி.



ஹொரணை, ஏப். 26

கனடாவில் கடந்த திங்கட்கிழமை பாதசாரிகள்மீது ட்ரக்மோதி விபத்துக்குள்ளானதில், இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொரணையைச் சேர்ந்த ரேணுகா அமரசிங்க(வயது-48) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

ஹொரணையைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த இரண்டு வருடங்களாக டொரொன்டோவில் வசித்து வருவதாகத் தெரியவந்துள்ளது. அந்தச் சம்பவத்தில் இலங்கை பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்பதை டொரொன்டோ மாஹாவிஹார பௌத்த நிலையத்தின் பிரதான தேரர் அஹாங்கம ரத்னசிறி உறுதி செய்துள்ளார்.

டொரண்டோவில் பாதசாரிகள் மீது ட்ரக் மோதியதில்10 பேர் கொல்லப்பட்டனர். மேலும்15பேர்காயமடைந்துள்ளனர். இந்த விபத்துக்குக் காரணமான ட்ரக் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார். இந்த நிலையில், அவர் கனேடியப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சாரதி, மக்கள் மீது வேண்டும் என்றே வாகனத்தைச் செலுத்தி இந்த அனர்த்ததை ஏற்படுத்தி உள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. எனினும், இந்த விபத்துக்கும் தீவிரவாத இயக்கங்களுக்கும் சம்மந்தம் உள்ளதா என்பது குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ஆ)

# கோத்தாவை விசாரிக்க தைரியம் இல்லை

## மேர்வின் காட்டம்



கொழும்பு ,ஏப்.26

வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களில், உத்தரவுகளைப் பிறப்பித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கான தைரியம் நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்கு இல்லை என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“அவருடைய உத்தரவுகள் இன்றி எதுவும் இடம்பெற்றிருக்க முடியாது. பாதுகாப்பு அமைச்சர் அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயல்ர்ளரே உத்தரவுகளை பிறப்பித்திருக்க வேண்டும். 2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்துடனும் கோத்தாபய ராஜபக்சவுக்கு தொடர்பு உள்ளது. பாதாள உலகக் குழுக்களுடன் எவருக்காவது தொடர்புகள் காணப்பட்டால் அவர் படுகொலை செய்யப்படுவார். எனினும், பொலிஸ் விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படமாட்டாது. பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் பொதுமக்களைப்படுகொலை செய்வதற்கான உரிமை அரசியல்வாதிகளுக்கு இல்லை” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## ரயில் கட்டண அதிகரிப்பு 15 வீதத்தால் உயரும்?

கொழும்பு ,ஏப்.26

ரயில் கட்டண அதிகரிப்பு தொடர்பிலான குழுவின் அறிக்கை போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிப்பது தொடர்பிலான யோசனை உள்ளடக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத் தகவல்கள் தெரவிக்கின்றன.

பயணிகள் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனை மாத்திரம் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பொதிகள் விநியோக சேவைக்கான கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படப்போவதில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கை, அமைச்சரவையின் அனுமதிப் பெற்றதன் பின்னர் ரயில் கட்டண அதிகரிப்பு தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## பொதுச்சந்தை இயங்காமையால் 450 குடும்பங்கள் பாதிப்பு

### முரசுமோட்டை மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஏப். 26

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபையின் கீழ் உள்ள முரசுமோட்டைப் பொதுச்சந்தையை உரிய முறையில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் வர்த்தக நிலையங்களில் மரக்கறி விற்பனைகளை நிறுத்தியமை போன்ற காரணங்களால் சுமார் 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முரசுமோட்டை உப அலுவலகத்தின் கீழ் உள்ள முரசுமோட்டை பொதுச்சந்தை கடந்த 2012ஆம் ஆண்டு நெல்சீப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. இருப்பினும் அதனை பிரதேச சபை நிர்வாகம் உரிய முறையில் செயற்படுத்தாமையால் குறித்த சந்தையில் மரக்கறி விற்பனைகளில் ஈடுபட்டவர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை கைவிட்டுள்ளனர்.

இந்தச் சந்தையை உரிய முறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்தபோதும், உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால், சந்தையின் செயற்பாடுகள் செயலிழந்துள்ளன.

இதேவேளை, இந்தப் பொதுச்சந்தை வளாகத்தில் குடிதண்ணீர், மலசலகூட வசதி என்பனவும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஆ)

## நடு வீதியில் மே தினக் கூட்டம்

கொழும்பு ,ஏப்.26

இந்த முறை நடு வீதியில் வைத்தேனும் மே தினக் கூட்டத்தை நடத்துவோம் என முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“மே மாதம் முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாகும். தொழிலாளர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு கொழும்பு ஹைட் மைதானத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தோம். அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் மைதானத்தை வழங்கவில்லை. இதன் காரணத்தால் நடு வீதியில் வைத்தேனும் மே தினக் கூட்டம் நடத்தப்படும்.

‘மெய்யான மாற்றத்துக்கு இடதுசாரி பலம்’ என்ற தொனிப் பொருளில் இந்த முறை மே தினக் கூட்டம் நடத்தப்பட உள்ளது. அரசாங்கம் முதலாம் திகதி மே தினக் கூட்டத்தை நடத்துவதில்லை என தீர்மானித்துள்ளது.எனினும், இந்தத் தீர்மானத்தை கவனத்தில் கொள்ளாது மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு எமது கட்சி தீர்மானித்துள்ளது .” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

எதிரொலி
Ethiroli
வியாழன், 26 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# அபாயா அபாயமா?

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்ற இணைந்த முஸ்லிம் ஆசிரியை ஒருவர் அபாயா அணிந்து செல்வதற்கு எதிர்ப்புக் கிளம்பியதன் பின்னணியில் அங்கு சர்ச்சை ஒன்று உருவாகியுள்ளது. அபாயா என்பது முஸ்லிம் பெண்கள் அணியும், அவர்களின் மதம் சார்ந்த ஒரு ஆடை. அதை அணியாமல் ஏனைய ஆசிரியர்களைப் போன்று அவரும் வரவேண்டும் என்பதே அந்தப் பாடசாலையின் எதிர்பார்ப்பு.

இலங்கையில் அநேக பள்ளிக்கூடங்கள் ஏதோவொரு மத அமைப்புக்களின் பின்னணியாலாயே நடத்தப்படுகின்றன. மெதடிஸ்த திருச்சபையின் கீழ் இயங்கும் கிறிஸ்தவப் பாடசாலைகளில் மாணவர்கள் கையில் கோயில் நூல் கட்டிச் செல்வதற்குத் தடை. இங்கு எந்த முஸ்லிம் ஆசிரியையும், அபாயா அணிந்ததில்லை. மாறாக முக்காடு அணிந்திருப்பார்கள். சைவ ஆசிரியர்கள் எவரும் வேட்டி அணிந்து வருவதில்லை. இதுபோல் அநேக பாடசாலைகளில், அந்தப் பாடசாலை நிர்வாகத்துக்குத் தக்கவாறு சில சில வழமைகள் இருக்கும். இத்தகைய வழக்கங்களால் எந்தவொரு மதமோ, இனமோ அடக்கப்படுவது கிடையாது. அந்தப் பாடசாலை மற்றும் அங்குள்ள மாணவர்கள் ஆகியோரைப் பொறுத்து, ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கிடையிலான அன்னியத்தன்மையை இயன்றளவு குறைப்பதற்கான முயற்சியே இது . அதற்காக ஒரு ஆசிரியரையோ, அல்லது மாணவரையோ முழுமையாக அவர்களின் இன, மத அடையாளத்தை மறைப்பது கிடையாது. அவர்களது கலாசாரங்களை வெளிப்படுத்தும் அதே சமயத்தில், அதிகளவு அன்னியத்தன்மையையும் கொண்டுவராதவண்ணம் ஒரு சுமுகமான தீர்வைக் கொடுப்பதே சரியான நடைமுறையாக இருக்கும். இருப்பினும், இதுபோன்ற விடயங்கள் ஆசிரியர்களை வேலைக்குத் தெரியமுன்னரே தெளிவாகக் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும்.

பொதுவாக ஒவ்வொரு ஊருக்கென ஒரு மொழிவழக்கு இருக்கும். ஒவ்வொரு இனத்துக்கென சில நடைமுறைவழக்கு, மதங்களுக்கு என தனி வழக்கு இருக்கும். ஒரு பாடசாலையில், குழந்தைகளுக்குக் கற்பிக்க அமர்த்தப்படும் ஆசிரியர், அந்தப் பள்ளி மாணவர்களின் மொழிவழக்குக்குப் பரிச்சயமானவராக இருக்கவேண்டும். பள்ளிகளின் அடிப்படை நோக்கம் மாணவர்களுக்குக் கற்பிப்பதே. ஆக, அந்த மாணவர்களின் மொழிவழக்குப் புரியாத ஆசிரியரால் அந்த மாணவர்களின் கல்வி மேம்படப்போவதில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆக, ஒரு பள்ளியில் ஆசிரியரைத் தெரிகையில், அவர்களின் மொழிவழக்கும் மாணவர்களுக்குப் பரிச்சயமானதாக இருக்கும் வண்ணம் தெரிவதே சிறப்பு.

இந்தப் பிரச்சினையில் எந்த இனத்தின் கலாசார ஆடை நாகரிகமானது, எந்த இனத்தின் மொழிநடை சரியானது என்னும் வாதம் அர்த்தமற்றது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# வெடிபொருள் கடத்தியவர் வலி.வடக்கில் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஏப்.26

படையினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட யாழ். வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து சட்டவிரோதமாக வெடிபொருள்களைக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். வலிகாமம் வடக்கு வள்ளுவபுரம் பகுதியில் வைத்தே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து மிகவும் அபாயகரமான சுமார் பத்து கிலோகிராம் வெடி மருந்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர். யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

படையினரின் பயன்பாட்டிலிருந்து குறித்த பகுதி கடந்த வாரம் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வெடி பொருட்கள் படையினரால் தவறுதலாக விட்டு செல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு வெடிபொருட்கள் கிடப்பதை அவதானித்த குறித்த நபர் இரகசியமான முறையில் அபாயகரமான வெடி பொருளை உடைத்து, அதிலிருந்த வெடி பொருட்களைச் சேகரித்துள்ளதுடன், அதை வேறு பகுதிக்கு எடுத்து செல்ல முற்பட்ட போதே பொலிஸாரிடம் பிடிபட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காங்கேசன் துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபரை மல்லாகம் நீதவான் முன்னிலையில் இன்று ஆஜர் செய்யவுள்ளனர். (அ)

# ஆஸி. சென்று திரும்பியோர் கட்டுநாயக்காவில் சிக்கினர்

கொழும்பு, ஏப்.26

கடல் மார்க்கமாகப் படகில் அவுஸ்ரேலியா சென்றிருந்த 8 பேர் மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நேற்றையதினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 8 பேரையும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள், மினுவன்கொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து, தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப் பட்டனர்.

# முஸ்லிம் மக்கள் மீது திட்டமிட்ட வன்முறை

கொழும்பு, ஏப்.26

கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் முஸ்லிம்கள் மீது இடம்பெற்ற வன்முறைகள், மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத்பதியுதீன்தெரிவித்துள்ளார்.

இலங்கை - மாலைதீவுக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டொரிஸை கைத்தொழில், வர்த்தக அமைச்சில் வைத்து நேற்றுச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நீல் கவனாஹ் ஒபேயும் கலந்து கொண்டார்.

முஸ்லிம்கள் மீது இடம்பெற்ற இந்த வன்முறைகள் அந்த மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வன்முறைகளின் பாதிப்புக்களிலில் இருந்து முஸ்லிம் சமூகம் இன்னும் விடுபடாமல் இருக்கின்றது. கடந்த கால அரசிலும் முஸ்லிம்கள் மீது அட்டூழியங்கள் நடத்தப்பட்டன. அதே போன்று, இந்த அரசிலும் அவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்படவில்லை. கண்டிச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரோ, பாதுகாப்புப் படையினரோ உரிய வேளையில் நடவடிக்கை எடுக்கவில்லை.

நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களின் பாதுகாப்புத் தொடர்பில், பிரிட்டன் அரசு கவனம் செலுத்த வேண்டும். முஸ்லிகள் மீது நடாத்தப்பட்டு வருகின்ற இந்தச் சம்பவங்களைத் தொடர அனுமதிக்க வேண்டாம் என்று இலங்கை அரசுக்கு, பிரிட்டன் எடுத்துரைத்து, இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கக் வேண்டும் இன நல்லிணக்கம் என்பது, நிறுவனங்களையோ, தாபனங்களையோ உருவாக்கி அதன்மூலம், எதிர்பார்த்த அடைவைப் பெறமுடியாது. அரசியல்வாதிகளாலோ, மதத் தலைவர்களால் வெறுமனே இன சௌஜன்யத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற கோட்பாடும் வெற்றியளிக்கப் போவதில்லை.

முப்பது வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டு தென்னிலங்கைப் பிரதேசத்தில் வாழும் வடக்கு மாகாண முஸ்லிம்களில் 30 சதவீதமானோரே, தற்போது மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். எஞ்சியோரை மீள்குடியேற்றுவதற்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் பிரிவினைக்கு ஆதரவளிக்காமையினாலேயே, அவர்கள் தமது பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்டனர். போர் முடிந்து அமைதி திரும்பிய பின்னர், முஸ்லிம்கள் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் மீளக்குடியேறச்சென்ற போது, அங்கு வளர்ந்திருந்த காடுகளை த் துப்புரவாக்கும் போதே, முஸ்லிம்கள் காட்டை அழிக்கின்றனர் என்றும் வில்பத்தை நாசம் செய்கின்றனர் எனவும் இனவாதிகள் மிகமோசமாகக் கதை பரப்பினர்.

தென்னிலங்கையில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டு வருகின்ற தாக்குதலுடன் தொடர்புடையவர்களே, வடக்கிலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இவர்களுக்கு பாரிய பின்புலம் உண்டு. அப்பாவிச் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களைப் பற்றித் தவறான எண்ணங்களை விதைத்து, அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட வைப்பதே இதன் நோக்கமாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

# நகரசபையில் அவமதிப்பு வெளியேறிய தியாகராசா

வவுனியா, ஏப்.26

வவுனியா நகரசபையின் வரவேற்பு நிகழ்வில் இருந்து வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா வெளிநடப்பு செய்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வவுனியாநகரசபையின்உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போதே அவர் வெளிநடப்புச் செய்திருந்தார்.

இதன்போது அதிதிகளுக்கு உரையாற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட நிலையில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் உரையாற்றிய நிலையில் மாகாணசபை உறுப்பினர் எம். தியாகராசா மேடையில் அமர்ந்திருந்தார். அப்போது நிகழ்வுக்கு சமூகமளிக்காத நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தானின் பிரதிநிதியொருவருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த மாகாணசபை உறுப்பினர் நிகழ்வு மண்டபத்தில் இருந்த வெளியேறினார்.

"யார் யாரோ எல்லாம் பேசுகின்றார்கள். மாகாணசபை உறுப்பினர் என்றவகையில் மதிப்பளிக்கத் தெரியாத இடத்தில் இருப்பது சிறப்பல்ல. எனவே வெளியேறி வவுனியா வடக்கு பிரதேசசபையின் நிகழ்வுக்குச்செல்கின்றேன்" என அவர் தெரிவித்தார்.(அ)

# பேராதனைப் பல்கலையில் தீ பரவல்

கண்டி, ஏப்.26

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவப் பிரிவில் நேற்று பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கண்டி - மாநகர சபை தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்சாரக் கசிவு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூநகரியில் விபத்து

பூநகரி, ஏப்.26

பூநகரி-நல்லூர்ப் பகுதியில் நேற்றுக்காலை கனரக வாகனமொன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளைப் பந்தாடியதில் அதில் பயணித்தவர படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)



## இன்று நாளும் கோளும்

26.04.2018 வியாழக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 13 ஆம் நாள்

ஏகாதசி மு.ப. 10.03 வரை | பூரம் பி.ப. 02.58 வரை | குளிகை மு.ப. 09.00-10.30

இராகுகாலம் 01.30- 03.00 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் பி.ப. 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறுமை | கவனம் | ஊக்கம் | திறமை | நேர்மை | புகழ் | செலவு | பக்தி | சிந்தனை | உறுதி | அசதி | மேன்மை |


# மத்திய கிழக்கு நாடுகளில் மட்டு. பெண்களே அதிகம்

வாகரை, ஏப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அதிகளவான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப் பெண்களாக சென்றுள்ளார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

வாகரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாட்டில் வறுமை நிலையில் 3 ஆவது இடத்தில் மட்டக்களப்பு மாவட்டம் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 400 மில்லியன் ரூபா மதுபானத்துக்காகச் செலவிடப்படுகின்றது. இருப்பினும், தமிழ் பிரதேச செயலகப் பிரிவுகள் வறுமையின் உச்ச நிலையில் இருக்கின்றன. எல்லாவற்றையும் இழந்த எமது சமூகம் கல்வியில் முன்னேற வேண்டும். எதிர்வரும் காலங்களில் அவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மாணவர்கள் பட்டம் பெற்று வெளியில் வந்தவுடனேயே அவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்க வேண்டும். அவ்வாறான கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



## வன்னியாச்சி நூல் அறிமுக நிகழ்வு

பரந்தன், ஏப். 26

வன்னியாச்சி நூல் தொகுதி அறிமுக நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பரந்தன் குமரபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள சுப்பையா நினைவு மண்டபத்தில் எழுத்தாளர் கருணாகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை அதிபர் ம.-பத்மநாபனும், தலைமையுரையை எழுத்தாளர் கருணாகரனும், நூல் அறிமுக வுரையை கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் மீனலோஜினி இதய சிவதாஸும், மதிப்பீட்டுரைகளை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி ஆசிரியர் சி. ரமேஸ், மு / ஒலுமடு அ.த.க.பாடசாலை ஆசிரியர் ப. தயாளன், கிளி சாந்தபுரம் வித்தியாலய அதிபர் பெருமாள் கணேசன் ஆகியோர் நிகழ்த்துவர்.

இதில், நூல் பிரதிகளை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி வழங்குவார். (ஆ)

## 20 ஆவது சட்டம் ஜனநாயகத்தை விரிவுபடுத்தும்

கொழும்பு, ஏப். 26

ஜனநாயகத்தை விரிவுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"நாடாளுமன்றத்தில் தனி நபர் யோசனையாக இந்த 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரவுள்ளது. இந்த திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவது தொடர்பில் நாட்டுக்கு தெளிவுப்படுத்துவோம்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ச, பிரசன்ன ரணதுங்க மற்றும் பந்துல குணவர்தன ஆகியோரின் கருத்துக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



## தாய்வீடு இதழின் சிறுகதைப் போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, ஏப். 26

தாய்வீடு இதழ் நடத்திய 2017 ஆம் ஆண்டுக்கான அமரர் நாகேஸ்வரி திருநாவுக்கரசு நினைவு உலகளாவிய சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன.

இதற்கான பரிசளிப்பு விழாவும், பரிசுக் கதைகள் நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில், கொழும்பைச் சேர்ந்த சந்திரகாந்தா முருகானந்தன் எழுதிய 'மயான பூமி' சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்தச் சிறுகதை 20 ஆயிரம் ரூபா பணப் பரிசைப் பெற்றுள்ளது. கனடாவைச் சேர்ந்த வசந்தன் மகேஸ்வரன் எழுதிய 'உன்ருக்கும் தெரியாது யாருக்கும் புரியாது' சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்று 15 ஆயிரம் ரூபா பணப் பரிசையும், கனடாவைச் சேர்ந்த ராமேஸ்வரன் சோமசுந்தரம் எழுதிய 'ஓர் ஆறு வழி பிரித்தோடுகிறது' என்ற சிறுகதை மூன்றாம் இடத்தைப் பெற்று 10 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்றுள்ளது.

இதேவேளை, சிலாவத்தை கிருஸ்ணராசாவின் 'சவம்', ஹாலி எல ராஜீவ் காந்தியின் 'புத்தங் சரணம் கச்சாமி', கொழும்பு பொ.புஸ்பராஜியின் 'தொலைக்கப்பட்டவள்', கிண்ணியா கே.எம்.எம். இக்பாலின் 'அதிஸ்டம்', கல்முனை முகில் வண்ணனின் 'கன்னி விதவை', லண்டன் கீர்த்தி சிங்கம் குமரேஸ்வரனின் 'ஞானப் பழம்', கனடா ராமேஸ்வரன் சோமசுந்தரத்தின் 'நடக்காது ஆனால் நடக்கும்' ஆகிய ஏழு சிறுகதைகளும் தலா 5 ஆயிரம் ரூபா பணப்பரிசுகளைப் பெற்றுள்ளன. (ஆ)

## 3000 பொலிஸ் சேவையில்



கொழும்பு, ஏப். 26

வெசாக்தினத்தை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்புக்கருதி ஆயிரத்து 900 பொலிஸாரும், ஆயிரத்து 100 போக்குவரத்துப் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட உள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"கொழும்பில் உள்ள 5 வெசாக் வலயங்களில் 11 வெசாக் தோரணங்கள் அமைக்கப்பட உள்ளன. வெசாக் தினங்களில் வீதி விபத்துக்கள் மட்டுமின்றி போக்குவரத்து நெரிசலும் அதிகரித்துக் காணப்படும். எனவே தான் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன." எனவும் அவர் தெரிவித்தார்.(ஆ)

## மலேரியா காய்ச்சல் உருவாகும் அபாயம்

கொழும்பு, ஏப். 26

நாட்டில் மலேரியா காய்ச்சல் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜேசிங்க எச்சரித்துள்ளார்.

"நுளம்புகளால் ஏற்படக்கூடிய நோய்களுள் ஒன்றான மலேரியாவை முற்றிலும் ஒழித்த நாடு இலங்கை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள போதிலும், மீண்டும் இங்கு மலேரியா காய்ச்சல் ஏற்படவாய்ப்புள்ளது. இந்தியா உட்பட இலங்கையின் அண்டைய நாடுகள் பலவற்றிலும், மலேரியாவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், அது இங்கும் பரவக்கூடும்." எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## புத்தளத்தில் கஞ்சா செய்கை

புத்தளம், ஏப்.26

புத்தளம் - வந்தம தெமலிய பிரதேசத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா செடிகளைப் பயிரிட்டிருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுமார் 50 ஆயிரம் கஞ்சா செடிகளைப் பயிரிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

துனுகம்வெஹர குடாகம்மான பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஆ)

## எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது





கொழும்பு, ஏப். 26

எரிபொருள் விலையை அதிகரிக்கும் யோசனை இல்லை என பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்புத் தொடர்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, அமைச்சர்கள் சிலர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

[illegible] டத்தில் இயங்கினாலும் தற்பொழுது விலையை அதிகரித்து மக்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் எண்ணம் இல்லை." என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் விலை தொடர்பில் விலைச் சூத்திரம் ஒன்று முன்வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அமைச்சரவையில் அவ்வாறான விலை சூத்திரம் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பது [illegible] (ஆ)

## விபத்தில் இளைஞன் பலி!

களுத்துறை, ஏப்.26

களுத்துறை - போம்புவல வீதியின் கர்மான்தபுரய பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, நாகொட பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான ஓட்டோ ஒன்றை இன்னொரு ஓட்டோவில் கட்டி எடுத்துச் செல்லும் போது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண் [illegible]

# எயார்லைன்ஸ் மோசடி: விரைவில் சாட்சிப் பதிவு

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் மோசடிகள் குறித்து கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் விசாரணைகளுடன் தொடர்புடைய சாட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள், எதிர்வரும் இரண்டு வாரக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துடன் இணைந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சர்வதேச ரீதியாக இருந்து வரும் அங்கீகாரத்தைப் பாதுகாத்து சிறந்த விமான சேவையாக அதன் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல வேண்டியதன் தேவையை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கன் விமான சேவையுடன் இணைந்த 6 தொழிற்சங்கங்களில் 5 தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள், இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது, நிறுவனத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வது குறித்து விரிவான கருத்துக்களும் முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.

ஸ்ரீலங்கன் விமான சேவைகளின் தரத்தை மேம்படுத்தி பிரயாணிகளுக்கு சிறந்த முறையில் பயணம் செய்யக்கூடிய வகையில் வசதிகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரதும் தகவல்களை பெற்று, அனைவரினதும் முன்மொழிவுகளையும் கவனத்தில் எடுத்து அரசாங்கத்துக்கு தேவையான பரிந்துரைகளை செய்வதற்கு ஆணைக்குழு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.(ஆ)

# 6 வயதுச் சிறுவன்மீது துஷ்பிரயோகம்

பள்ளம, ஏப். 26

6 வயதுச் சிறுவன் ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 40 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் பள்ளம நாகவில பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமாகாதவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தச் சிறுவனை பாடசாலைக்குத் தினமும் அழைத்துச் செல்வதை வாடிக்கையாகச் செய்து வந்துள்ள குறித்த நபர், தினமும் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமையும் பாடசாலையில் இருந்து சிறுவனை வீட்டுக்கு அழைத்துவந்து பிரஸ்தாப நபர், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி உள்ளார். இதன்போதே அவரின் பல நாள் செயல் அம்பலமாகி உள்ளது. சிறுவனின் பெற்றோர் வீட்டில் இல்லாத சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக புத்தளம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, ஆனமடுவ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஆ)

# 50 இலட்சம் மதிப்பான பீடி இலை மீட்பு



மன்னார், ஏப். 26

மன்னார் பாம்பன் குந்துகால் கடற்கரைப் பகுதியில் இருந்து 50 இலட்சம் ரூபா மதிப்புடைய உயர் தர பீடி இலை மூட்டைகள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன.

உயர் ரக பீடி இலைகள் மூட்டை மூட்டையாகக் கரை ஒதுங்கியுள்ளதாக அந்தப் பகுதி மீனவர்கள் வழங்கிய தகவலை அடுத்து, சுங்கப்பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து இந்த மூட்டைகளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 25 பீடி இலை மூடைகள் உயர் ரகத்தைச் சேர்ந்தன எனவும் இதன் மதிப்பு சுமார் 50 இலட்சம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையினரின் ரோந்துப் பணியின் போது மூட்டைகளைக் கடலில் தள்ளிவிட்டு படகுடன் கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஆ)

# வெளிநாட்டவர்களுக்கு சுகாதாரப் பரிசோதனை



கொழும்பு, ஏப். 26

வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வரும்போது அவர்களைச் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது என்று சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

international organization for migration என்ற அமைப்புடன் இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். இதன்மூலமாக இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களின் தேக ஆரோக்கியம் குறித்துப் பரிசோதனை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவர்களை நாம் திருப்பிய அனுப்ப மாட்டோம். அவர்களுக்கு இலவசமாக சிகிச்சையளிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# சு.கவின் மே தினக்கூட்டம் இந்தமுறை மட்டக்களப்பில்!

கொழும்பு, ஏப்.26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி மட்டக்களப்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய நிறைவேற்றுச் சபையில் நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

"ரி.பி. இலங்கரட்ண, அலவி மௌலானா போன்ற தொழில் வர்க்கத்துக்காக அளப்பெரும் சேவையாற்றிய தொழிற்சங்கத் தலைவர்களை பாராட்டும் மாநாடு ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற உள்ளது. மே தினம் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்று நாட்டுக்கு நற்பெயரையும், பல நன்மைகளையும் ஈட்டிக் கொடுத்திருக்கிறார்.



இந்த மாநாட்டில் பங்கேற்றதன் மூலம் ஜனாதிபதிக்கு 53 நாடுகளின் அரச தலைவர்களைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது." என்றும் அவர் தெரிவித்தார்.(ஆ)



## உந்தப் பொங்கலை நம்பாதையுங்கோ! உது நடிப்பு!! ஒரு நாடகம்!!!

திடீர் திடீர் எண்டு குண்டைத்தூக்கிப் போடுறமாதிரி எல்லாம் கதைக்கத் துவங்கிவிட்டாங்கள் எணை. எனக்குப் பயமாக் கிடக்கு. என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கிடக்கு. களைக்குதண்ணை. கொஞ்சப் பச்சைத் தண்ணி தாருங்கோ – எண்டு சொல்லிக் கொண்டு ஆத்துப் பறந்து வந்தான் முதலி. முந்தின மாதிரி நான் முதலி சொல்லுறதை நம்பமாட்டன். ஏனெண்டால் போன உள்ளூராட்சி எலக்சன் காலத்திலை ஒண்டுறண்டு விசியத்திலை முதலி சொன்னது பொய்யாப் போச்சுது. அவன் சொன்ன மாதிரி நடக்கேல்லை. அது அவனின்ரை பிழையும் இல்லை. செய்தி போட்டவங்களின்ரை பிழை அது. அதாலை கான் போனைத் திறந்து வைச்சபடிதான் காய் வந்திது. "பார் அண்ணை" – எண்டு காட்டினான்.

அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள சுமந்திரன் எச்சரிக்கை! – எண்டு செய்தி போட்டிருந்தது. எனக்கு இதைப் பாக்க ஒரு விதமான கிலேசமோ இல்லை அதிர்ச்சிமாதிரியோ ஒண்டும் இல்லை. முதலி போய் கான்போனை எங்கையேன் எறிஞ்சு போட்டுப் பாக்கிற வேலையைப் பாரன். உனக்கு அறிவு இல்லையே? அவர் ஒருத்தருக்கு வேலை ஒண்டும் இல்லை. அப்பப்ப இருந்திட்டு அவர் சொறிக் கதை கதைப்பர். இவரும் அதைக் கேட்டிட்டுச் சுடுதண்ணி குடிச்ச நாய் மாதிரி ஓடிவாறது. "எடே முதலி உவங்கடை நாடகம் என்ன எண்டு உனக்கு விளங்காதோ? அப்புக் காத்து வேலை இருந்தால் ஆளைப் பிடிக்கேலாது. ஒண்டும் இல்லாத நேரத்திலை தானும் ஒரு ஆம்பிளை இருக்கிறன் எண்டு காட்ட உப்பிடி ஒரு கதை. அரசியல் சீர் கெட்டுப் போச்சுது.

அரச நிர்வாகத்தை முடக்க ஒரு போராட்டம். உதை அரசாங்கமும் செய்ய விடும். ஏனெண்டால் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் சீரழிய வேணுமெண்டதுதானே சிங்களப் பேரினவாதியளின்ரை ஆசை. அப்ப அப்பிடி ஒரு விளையாட்டை சுமந்திரன் முன்னெடுத்தால் ஆருக்கு லாபம். வடக்கிலையும் கிழக்கிலையும் அரச நிர்வாகம் முடங்கினால் என்ன ரணிலும், மைத்திரியும் சாப்பாடு இல்லாமல் சாகப்போகினமே? இல்லாட்டிச் சிங்கள அரசியல்வாதிக்கு என்ன நட்டம் வரப்போகுது?

அப்ப வேறை விதமாக் காய் நகர்த்தத் தெரியாதெண்டபடியாலை இதுக்கு வெளிக்கிடுறார். உதை ஆரும் செய்யலாம். சுமந்திரனின்ரை அறிவிப்பு இனியும் பொறுமை காக்கமுடியாது எண்டதாலை வந்ததாம். அவர் பொறுமை ஒண்டும் இழக்கேல்லை. அவருக்கு இப்ப இப்பிடி ஒரு தேவை இருக்குதெண்டதை நாங்கள் விளங்கிக் கொண்டால் சரி. இப்பிடிச் சொல்லாட்டித் தமிழ் கூட்டமைப்புத் தொடர்ந்தும் இருக்கேலாத நிலைமை வரும் எண்டு தெரிஞ்சதாலைதான் உப்பிடிச் சொல்ல வெளிக்கிட்டிட்டினம். இனி அடுத்த எலக்சன் வருகுது. உள்ளூராட்சிச் சபை அமைக்கிறதிலை படு தோல்வி. சுரேஸ்– சங்கரி கூட்டு வெற்றி. சீ எம் அறிவிச்ச விசியத்தாலை பல தர்மசங்கடம் வந்திருக்கு. உது அரச நிர்வாகம் எண்டு மைத்திரி – ரணில் அரச நிர்வாகத்தை முடக்கிற நோக்கத்திலை இல்லை. உது சீ எம் மின்ரையும், மற்றக் கட்சிகளுக்கு வாற செல்வாக்கைக் குறைக்கிறதுக்குமான ஒரு பெரு வெளி ஒண்டைக் கண்டு பிடிச்சுக் காய் நகர்த்தப்போறாராம் சுந்தரனார் சுமந்திரன்.

கரடி பொற் காசு தாறன் எண்டு பிராமணனை ஏமாத்தின கதை எப்பவும் ஞாபகத்துக்கு வரட்டும். சுமந்திரன் வந்த பாதை என்ன? சொன்ன கதை என்ன? சேந்த கூட்டு என்ன? எண்டதை ஒருக்காப் பழைய பேப்பர்களைப் புரட்டிப் பாருங்கோ. சரியா விளங்கும். எத்தினை பொய்? எத்தினை புரட்டு? எத்தினை தரிகிட? இத்தனையும் செய்த சுமந்திரனா பொங்கி எழுந்திருக்கிறார்? எண்டு வீர வசனம் பேச வேணும்போலை கிடக்கு.

ஏதோ நம்பாதையுங்கோ உந்தக் கதையை. உதுக்குப் பின்னாலையும் ஒரு பெரிய அரசியல் இருக்கும். ஏதோ ஒரு பெரு வேட்டு வைக்கிறதுக்கான பொங்கல்தான் உது. நம்பிக் கெட்டது போதும். சிங்கள அரசியல்வாதியளை இல்லை. எங்கடையளை. அதுவும் சுமந்திரன் போலை ஆக்களை?

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## எழிலன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு நீதிமன்றத்திடம் குறித்த வழக்குளைப் பாரப்படுத்தியிருந்தது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்களில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளரும், வடமாகாண மகளிர் விவகார அமைச்சருமாகிய அனந்தி சசிதரனின் கணவர் சம்பந்தப்பட்ட மனுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற விசாரணைகளின்போது, இந்த மூன்று வழக்குகளின் மனுதாரர்களான விசுவநாதன் பாலந்தினி, கந்தசாமி பொன்னம்மா, கந்தசாமி காந்தி ஆகியோருடன் வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரனும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தின் அறிவித்தலுக்கு அமைய முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் முடிவில் அந்த விசாரணைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கைகள் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

அதனையடுத்து இந்த மூன்று வழக்குகளும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த வழக்குகள் தொடர்பாக விசாரணைகளில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும், சாட்சியங்களில் தெரிவித்தபடி, காணாமல் போனவர்கள் என்ன வகையான, என்ன இலக்கமுடைய பஸ்ஸில்ஏற்றிச்செல்லப்பட்டார்கள், என்று சாட்சியத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை எனவும் முல்லைத்தீவு நீதிமன்றம், வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளது.

அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் காணாமல்போயுள்ளவர்கள்எனத்தெரிவிக்கப்பட்டவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்களா, அல்லது காணாமல் போனார்களா என்பதைத் தீர்மானிக்க முடியாதுள்ளது என்றும், காணாமல் போனார்கள் என தெரிவிக்கப்பட்டவர்களுக்கு இந்த மனுக்களின் எதிர்த்தரப்பினர் பொறுப்புக் கூற வேண்டியதில்லை என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

"இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றத்தினால் கோரப்பட்டிருந்ததே தவிர, அந்த விசாரணைகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை. அத்துடன் முல்லைத்தீவு நீதிமன்ற அறிக்கைகளின் பிரதி மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அவற்றை ஆராய்ந்ததன் பின்னர் அடுத்த கட்டமாக இந்த வழக்குகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் முடிவெடுப்பதுக்காக தவணையொன்றைத் தரவேண்டும்" என்று மன்றில் சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்ற வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முல்லைத்தீவு நீதிமன்ற அறிக்கைகளின் பிரதியை மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவிட்டதுடன், இந்த வழக்குகளின் விசாரணையை எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(அ)

## கைதான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழுத்தை நெரித்தும், கத்தியால் குத்தியும், சாகும் வரை அடித்தும் கொன்றதாகவும் இலங்கையின் விசாரணை அதிகாரி ஒருவர், ஜஸ்மின் சூக்காவை நிறைவேற்றுப் பணிப்பாளராக கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்குமான செயற்றிட்டம் அமைப்பிடம் (ஐ.ரி.ஜே.பி) சாட்சியம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பான அதிர்ச்சி நிறைந்த அறிக்கை ஒன்றை ஐ.ரி.ஜே.பி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குற்றத்தில் ஈடுபட்ட 50 விசேட அதிரடிப் படையினரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின்ஆணையாளருக்கும்கையளிக்கப்படவுள்ளது.

அந்த அறிக்கை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளதாவது-

ஐ.நா அமைதி காக்கும் படையில் பணியாற்றுவதில் இருந்து தடை செய்யப்பட்ட வேண்டிய விசேட அதிரடிப் படையின் 50 க்கும் மேற்பட்ட விசேட அதிரடிப் படையினரின் பெயர்களை கொண்ட ஒரு இரகசிய பெயர்ப்பட்டியலை ஐ.ரி.ஜே.பி தயாரித்துள்ளது.விசேட அதிரடிப்படையினர் உட்பட பாதுகாப்பு படைகள் திட்டமிட்ட குற்றச்செயல்களை புரிந்துள்ளார்கள் என ஐ.நா தெரிவிக்கும் சூழலில் இந்தத் தனிப்பட்ட நபர்கள் குற்றவாளிகளாக அல்லது இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முன்னரங்க நிலையில் போரில் ஈடுபட்டவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

ஆபிரிக்காவில் ஐ.நாவின் அமைதி காக்கும் படையில் ஈடுபட்டுள்ள இலங்கையின் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் 2006 - 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் கண்மூடித்தனமாக கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தவர்.

இலங்கையில் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்பான அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 24 விசேட அதிரடிப்படையினரின் பெயர்களையும் இலங்கையின் போரின் போது முன்னரங்க முக்கிய சண்டை பணிகளில் ஈடுபட்ட 32 விசேட அதிரடிப்படை அதிகாரிகளதும் பெயர்களையும் குறித்த அறிக்கை கொண்டுள்ளது.

இதனால் இவர்கள் ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கையில் பணியாற்றுவதில் இருந்து தடை செய்யப்பட வேண்டும். பொலிஸ் கொமாண்டோக்களும் தற்போது வெளிநாடுகளுக்கு ஐ.நா அமைதி காக்கும் படையினராக அனுப்பபட்டு வருகின்றார்கள். அவர்களையும் இராணுவத்தை போன்று கடுமையான மீளாய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும். சாட்சியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டால் படங்கள், பெயர்கள், என அனைத்துத் தகவல்களையும் இந்த மீளாய்வு நடவடிக்கைகளுக்காக வழங்க தயாராக இருக்கின்றோம்.

இந்த அறிக்கை விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து செயற்பட்ட சிங்களவர்கள் மற்றும் தமிழ் ஒட்டுக்குழுக்களின் உறுப்பினர்கள் வழங்கிய சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது. "கொழும்பில் விசாரணைக்காக யுத்த காலத்தில் அழைத்து செல்லப்பட்ட தமிழர்களை கயிற்றால் அல்லது வயரால் கழுத்தை நசுக்கி கொல்லுவோம், கத்தியால் குத்துவோம் அல்லது சாகும் வரை அடித்து கொல்லுவோம்"என கொழும்பைச் சேர்ந்த இராணுவத்தின் விசாரணை அதிகாரி ஒருவர் ஐ.ரி.ஜே.பி யிடம் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்ட அனைவரும் இறுதியில் கொல்லப்பட்டு விட்டதாகவும் அவர் கூறியுள்ளார். பாலியல் வன்புணர்வு செய்தல், மறைமுக கொலைகள் என்பவற்றை இந்த விசேட அதிரடிப்படையே அரங்கேற்றி வந்ததாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது. இதற்கு ஆதரவாக தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவும் இருந்து வந்துள்ளது-என பல விடயங்களை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## 2020க்குள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி வடமாகாண பாடசாலை நூலகங்கள் மற்றும் சமூக மட்ட நூலகங்களுக்கான நூல்களை விநியோகம் செய்திருந்தார்.

அண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுமந்திரன், தமிழ் மக்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாவிடின், நிர்வாக முடக்கங்களை முன்னெடுப்போம் என தெரிவித்திருந்தார். கூட்டெதிரணி பொதுத் தேர்தல் நடாத்துமாறும், அரசாங்கத்தினை கலைப்பதற்கான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். பொதுத் தேர்தல் நடாத்த முடியுமான, அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்றும் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

"தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டுமென்று, அரசாங்கம் எண்ணியுள்ளதுடன், அது குறித்து ஆலோசனைகளையும் நடத்தி வருகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

எனவே, 2020 ஆம் ஆண்டுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படும் என்ற எண்ணுகின்றேன்.

இப்போதுள்ள அரசைக் கலைக்க நினைக்கும் மகிந்தவின் யோசனை மடத்தனமானது. தற்போது அரசாங்கத்தினை யாராலும் கலைக்க முடியாது.

அரசாங்கத்தினைக் கலைக்காது எவ்வாறு .பொதுத் தேர்தல் வைக்க முடியும். அது நடக்கின்ற விடயம் அல்ல.2020 ஆம் ஆண்டு வரைக்கும் எமது அரசாங்கம் நீடிக்கும் . கடவுள் புண்ணியத்தில் எதிர்வரும் 08 ஆம் திகதிக்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் சக்தி வாய்ந்த அரசாங்கமாக செயற்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## வடக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது மோசடிக் குற்றச்சாட்டை ஊடகம் ஒன்று அண்மையில் வெளியிட்டது. அத்துடன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணையைக் கோருவது என மாகாண சபை உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்த நிலையிலேயே வடக்கு ஆளுநர் மேற்குறித்த உத்தரவை விடுத்துள்ளார்.

"மாகாண அமைச்சர்கள் மீதான மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உண்மை நிலை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதம செயலாளருக்குப் பணித்துள்ளேன். அந்த அமைச்சர்கள் தொடர்பில் தற்போது எதுவுமே கூற முடியாது. விசாரணையின் பின்னரே எந்த முடிவுக்கும் வர முடியும்" என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமைச்சரவையில் இடம்பெற்றவர்களில் இருவர் மீது மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அவர்கள் இருவரும் பதவி விலகி ஒரு ஆண்டுகள் நிறைவடைய முன்னர் புதிய அமைச்சரவையின் அமைச்சர்கள் மீதும் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## முள்ளிவாய்க்கால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவுகூருவதற்கு நினைவாலயம் அமைக்க பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டனர்.

பல்கலைக்கழக வளாக முன்றலில் அதனை அமைக்கும் பணிகளை அவர்கள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்திருந்தனர். எனினும் அந்த இடத்தில் நினைவாலயம் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிப்பால் தடங்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தில் உயர் மட்டத்துக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழ்மை பிற்பகல் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அதனை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்துக்கு அருகாமையில் அமைக்குமாறும் உயர் மட்டத்தினரால் மாணவர் ஒன்றியத்திடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையை பரிசீலனை செய்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்கும் பணிகள் பல்கலைக்கழக வளாகத்தில் நிர்வாகத்தால் அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நேற்றுப் பிற்பகல்வரை நடைபெற்று வந்தத்.

இந்த நிலையில் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவாலயப் பணிகளை தற்போதுள்ள நிலையுடன் இடைநிறுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு இணைந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு பணித்துள்ளன.

இந்த நிலையில் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் நேற்று மாலையுடன் இடைநிறுத்தப்பட்டன.

(அ)

## மகிந்தவுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் ஒரு நபரிடம் இருக்கும்" தனியான அதிகாரங்களை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை, ஆணைக்குழுக்களுக்கு பகிர முடியும். இது எதிர்கால ஜனநாயகப் பயணத்துக்கு மிகவும் பிரயோசனமாக அமையும் என நாங்கள் நம்புகிறோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பது இதன் பிரதான நோக்கம்.

இது தொடர்பாக ஜனாதிபதி மாத்திரமல்லாது முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பினருடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளோம். திருத்தச் சட்ட யோசனை அடுத்த மாதம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும்" எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

## நல்லூரில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.ப 3.00 - பி.ப 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மேதின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்ட கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், இந்த நிகழ்வில் அனைத்து தொழிற் சங்கங்கள், பொது அமைப்புக்கள் பொது மக்கள் அனைவரையும் அணிதிரளுமாறு அறைகூவல் விடுத்துள்ளார். (அ)

## ஈ.பி.டி.பியிடமிருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு முதல் ஈ.பி.டி.பியினர் எமக்குச் சொந்தமான குறித்த திரையரங்கை அடாத்தாகப் பிடித்து வைத்துள்ளனர். அதனை எம்மிடம் ஒப்படைக்குமாறு பலமுறை சட்டத்தரணிகள் ஊடாகக் கடிதங்கள் அனுப்பியும் தொடர்ந்தும் அவர்கள் அங்கிருந்து வெளியேறாமல் உள்ளனர். பல மில்லியன் ரூபா பெறுமதியான இந்தத் திரையரங்கைப் பயன்படுத்துவதற்கு எமக்கு எவ்வித கொடுப்பனவும் கூட வழங்கப்படவில்லை. எனவே 1996 ஆம் ஆண்டு முதல் தற்போது அவர்கள் குடியிருக்கும் காலப்பகுதி வரைக்கும் திரையரங்கைப் பயன்படுத்தியமைக்காக மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வீதம் நஷ்ட ஈடு கோருவதுடன், குறித்த திரையரங்கையும் மீட்டுத் தருமாறு வேண்டுகின்றோம்" என் திரையங்கக் கட்டடத்தின் உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டத்தரணி கேசவன் சயந்தன் இந்த வழக்கில் முன்னிலையாகவுள்ளார். (அ)

## கேப்பாபிலவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நிலைகொண்டுள்ள 59 ஆவது படைப்பிரிவினர் தண்ணீர் பாய்ச்சி தீயினை பரவவிடாமல் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்கள்.

கடந்த 22 ஆம் திகதியும் இதே காட்டுப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவான காடு எரிந்து போயிருந்த நிலையில், நேற்று இரண்டாவது தடவையாகவும் கேப்பாபிலவுத் தேக்கங்காடு பற்றியெரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நைஜீரியாவில் சூடு: 18 பேர் உயிரிழப்பு!

## தேவாலயத்தில் துயரம்



மகுர்டி, ஏப். 26

நைஜீரியா நாட்டில் அமைந்துள்ள கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், 18 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியா நாட்டின் தலைநகர் மகுர்டியில் உள்ள செயின்ட் இக்னேஷியஸ்கத்தோலிக்கத் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் பலர் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டுருந்தனர். அப்போது தேவாலயத்துக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த இனந்தெரியாத நபர்கள், திடீரென தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் இரண்டு பாதிரிகள் உள்பட 18 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும், பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவில் முகமது புகாரி ஜனாதிபதியாக உள்ளார். இந்த நிலையில், அங்குள்ள பழங்குடியின முஸ்லிம் மக்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்படுகின்றமை வழமை.

அந்த நாட்டின் புலானி பழங்குடியின பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கிறிஸ்தவர்கள் விவசாயம் செய்யும் பிரிவினராக உள்ளனர். நிலங்களில் ஆடுகளை மேய விடுவது பற்றிய விவகாரத்திலேயே இரு பிரிவினருக்கும் இடையே பகைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வருடத் தொடக்கத்தில் மகுர்டி பகுதியில் நடந்த மோதலில் 73 பேர் கொல்லப்பட்டனர். புலானி பிரிவைச் சேர்ந்தவரான ஜனாதிபதி புகாரி மீது, இந்தத் தாக்குதல்களை தடுக்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என குற்றஞ்சாட்டுகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# நாடாளுமன்றிலும் பாலியல் தொல்லை

## ரேணுகா சவுத்ரி எம்.பி. பகீர்



புதுடில்லி, ஏப். 26

நாடாளுமன்றத்திலும் பெண்களைப் பாலியல் வற்புறுத்தலுக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி. ரேணுகா சவுத்ரி கூறியமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

"நடிகைகளின் சம்மதத்துடனேயே பாலியல் சம்பவங்கள் நடைபெறுகிறன. இதனால், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுகிறது ." என பிரபல நடன இயக்குநர் சரோஜ் கான் தெரிவித்த கருத்து சர்ச்சைக்குள்ளாகி உள்ளது. இதனை அடுத்து, சமூக வலைதளங்களில் அவருக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"சினிமாத்துறையில் மட்டும் கிடையாது, சகல துறைகளிலும் பெண்களுக்கு பாலியல் தொல்லை மேற்கொள்ளப்படுகிறது. பெண்கள் பாலியல் ரீதியாக வற்புறுத்தப்படுவதற்கு நாடாளுமன்றம் மட்டும் விலக்கல்ல. இது ஒரு கசப்பான உண்மை. பிரதமர் மோடி எனக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தரக்குறைவான கருத்தைத் தெரிவித்த போது, ஒரு பெண்ணாக என்னுடைய கண்ணியத்தை அன்று அவர் பறித்துவிட்டார். உலக அளவில் புகழ்பெற்ற நடிகைகள் தங்களுக்கு நேர்ந்த பாலியல் தொல்லைகளை, வெளியில் பேச நீண்ட காலம் ஆகியிருக்கிறது. இப்போது, இந்தியாவிலும் அவ்வாறு பெண்கள் தாங்கள் சந்தித்த பாலியல் வற்புறுத்தல்கள் குறித்து வெளிப்படையாகக் கூற வேண்டிய தருணம் இது" என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது, பிரதமரின் பேச்சின் இடையே காங்கிரஸ் எம்.பி. ரேணுகா சவுத்ரி சத்தமாகச் சிரித்தார். இதைக்கேட்ட மாநிலங்களவைத் தலைவர் வெங்கய்ய நாயுடுவும், ரேணுகா சவுத்ரியை கண்டித்தார். ரேணுகா சவுத்ரியின் சிரிப்பைக் குறிப்பிட்டு பேசிய பிரதமர் மோடி,

"இராமாயணம் மற்றும் மகாபாரதத்துக்குப் பின் இப்படி ஒரு சிரிப்பைக் கேட்கிறோம்." என்று கூறினார். இதைக் கேட்டு அனைத்து அமைச்சர்களும் சிரித்தனர். இதனை அடுத்து, பா.ஜ.கவின் தகவல் தொழில் நுட்பப் பிரிவுத் தலைவர், ரேணுகா சவுத்ரியின் சிரிப்பு மகாபாரதம், இராமாயணத்தில் யாருடையது என்று குறிப்பிட்டு ருவீட் செய்து இருந்தார்.

அதற்கு இராவணனின் தங்கை சூர்ப்பனகை எனப் பின்னூட்டங்கள் இடப்பட்டன. இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் பெரும் விவாதப் பொருளானது. காங்கிரஸ் கட்சி கடும் அமளியிலும் ஈடுபட்டது. ஆனால், ஆதார் திட்டம் தொடர்பாக மோடியின் முந்தைய பேச்சையும், இப்போதைய பேச்சையும் ஒப்பிட்ட போது சிரிப்பு வந்தது என ரேணுகா தெரிவித்திருந்தார். இந்தநிலையில், இப்போது அந்த விடயத்தைக் குறிப்பிட்டு ரேணுகா பேசியுள்ளமை குறிப்பிடத்த க்கது. (ஆ)

# சதுரங்க வேட்டை நாயகிக்கு திருமணம்

'சதுரங்க வேட்டை' படத்தின் மூலம் பிரபலமான நடிகை இஷாரா நாயருக்கும், துபாய் வாழ் இந்தியரான சாஹில் என்பவருக்கும் திருமணம் நடந்து முடிந்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

'வெண்மேகம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் இஷாரா நாயர். தொடர்ந்து 'பப்பாளி', 'சதுரங்க வேட்டை' உள்ளிட்ட படங்களிலும் நடித்தார். இதில், 'சதுரங்க வேட்டை' படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன் பெயர் சொல்லும் படமாகவும் அமைந்தது.

இருப்பினும் அந்த நாயகி அடுத்தடுத்த படங்களில் ஒப்பந்தமாகவில்லை. பின்னர் நீண்ட இடைவேளைக்கு பிறகு 'இவன் யாரென்று தெரிகிறதா' என்ற படத்தில் நடித்தார். தற்போது, 'பப்பரபாம்' என்ற படத்தில் நடித்து முடித்திருக்கிறார். வினோத் கிஷான் ஜோடியாக இஷாரா நாயர் நடித்துள்ள இந்தப் படம் இன்னமும் வெளியாகவில்லை. இந்த நிலையில், இஷாரா நாயருக்கு திருமணம் முடிந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

# பிரதமர் ஷேக் ஹசினாவுக்கு பெண் தலைமையாளர் விருது



டாக்கா, ஏப். 26

பலலட்சக்கணக்கான ரோஹிங்கியா அகதிகளுக்கு அடைக்கலம் அளித்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவுக்கு சர்வதேச பெண் தலைமையாளர் விருது வழங்கப்பட உள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த மகளிர் அமைப்பின் சார்பில் 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் உச்சி மாநாடு, அவுஸ்ரேலியா நாட்டின் சிட்னி நகரில் நாளை நடைபெற உள்ளது.

மியன்மார் நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களான ரோஹிங்கியா இன முஸ்லிம்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய பின்னர் சுமார் 4 லட்சம் ரோஹிங்கியா மக்கள் அங்கிருந்து வெளியேறி அண்டை நாடான பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்தனர். அவர்களை வரவேற்ற பிரதமர் ஷேக் ஹசினா தலைமையிலான பங்களாதேஷ் அரசு, தற்காலிக முகாம்களை அமைத்து அந்த மக்களைப் பராமரித்து வருகிறது.

"நாங்கள் சாப்பிடும் உணவில் பாதியை ரோஹிங்கியா அகதிகளுக்கு பகிர்ந்து கொடுப்போம்' என அறிவித்திருந்த ஷேக் ஹசினா, அகதிகளாக இருக்கும் மியன்மார் மக்கள் மீண்டும் தங்களது வசிப்பிடத்துக்கு சென்று குடியேறும் புனர்வாழ்வுக்கான ஒப்பந்தத்தையும் மியன்மார் அரசுடன் ஏற்படுத்தினார்.

மேலும், பங்களாதேஷ் பெண்கள், கல்வியிலும், தொழில் முனைவோராகவும் உயர்வதற்கும் அரும்பணியாற்றிய ஷேக் ஹசினாவின் வாழ்நாள் சேவையைக் கௌரவிக்கும் வகையிலேயே இந்த விருது வழங்கப்படுகிறது. (ஆ)

# ஜெயலலிதா வழியில் தூக்கி எறிவேன்!

## டி.டி.வி அதிரடி



தஞ்சாவூர், ஏப். 26

கட்சிக்கு எதிரான கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தால் உறவினர்களாக இருந்தாலும் ஜெயலலிதா வழியில் அவர்களைத் தூக்கி எறிவேன் என்று அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தமிழகத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் உளவுத்துறையைப் பயன்படுத்தி பல்வேறு தவறான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பரப்புகிறார்கள். எனவே கட்சிக்கு எதிரான கருத்தை யாராவது பதிவு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். யாராக இருந்தாலும் மன்னிக்க மாட்டேன். யாருக்கும், எதற்காகவும் பயந்து பின்வாங்க மாட்டேன். என்னை எளிதில் ஏமாற்றி விடலாம் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. உறவுகளையும், நட்பையும் மதிப்பவன். விட்டில் பூச்சிகளைப்போல் துரோகிகளிடம் மாட்டிக்கொள்ளாதீர்கள். இணையதளப் பதிவு உண்மையா? என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்கப் போவதில்லை. அதே சமயம் காவிரி நீரைப் பெற்றுத்தரும் வரை எங்கள் போராட்டம் ஓயாது. ஜெயலலிதாவின் தொண்டர்களில் 90 சதவீதத்தினர் எங்கள் பக்கம் உள்ளனர். இரட்டை இலைச் சின்னம் வழக்கில் நிச்சயம் நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை உள்ளது. ஜெயலலிதாவின் ஆட்சியை தொண்டர்கள் ஆதரவோடு விரைவில் அமைப்போம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# விஜய் -அஜித் ரசிகர்கள் தோனியால் மோதல்



சென்னை, ஏப். 26

இந்தியாவில் சினிமாவுக்கு அடுத்து கிரிக்கெட் தான் பிரபலமானது. தற்போது நடந்து வரும் ஐ.பி.எல் போட்டியின்போது சென்னை அணித் தலைவர் தோனி, தன் மகள் ஸிவாவை தோளில் தூக்கி வைத்து கொண்டிக்கும் ஒரு புகைப்படம் வெளியாகி உள்ளது. அது தெறி படத்தில் விஜய்-நைனிகா கொடுத்த 'போஸ்' போல உள்ளது என விஜய் ரசிகர்கள் கூறிவருகின்றனர்.

ஆனால், அஜித் தன் மகளைத் தூக்கி வைத்திருக்கும் புகைப்படத்துடன் ஸிவாவின் புகைப்படத்தை ஒப்பிட்டு தல ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இதனால் , விஜய், அஜித் ரசிகர்கள் தொடர்ந்தும் சமூகவலைத்தளங்களில் வார்த்தைப்போரில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பிரான்ஸில் அதிகரிக்கும் ஓரினத் திருமணங்கள்



பரிஸ், ஏப். 26

பிரான்ஸில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓரினச் சேர்க்கை திருமணங்கள் நடைபெற்றுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

பிரான்ஸில் ஓரினச்சேர்க்கை திருமணங்கள் சட்டபூர்வமாக அமுல்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளது. இதன் அடிப்படையில் வெளிவந்த புள்ளிவிபரப் பட்டியலில் 40 ஆயிரம் ஓரினச் சேர்க்கை திருமணங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வருடம் மட்டும் 7 ஆயிரம் திருமணங்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)



# கோஹ்லியை தெறிக்க விட்ட டோனி

பெங்களூர், ஏப்.26

டோனி- ராயுடு இணையின் அபார மான அதிரடியில், பெங்களூர் அணி யின் இமாலய இலக்கையும் தகர்த்து வெற்றியைச் சுவைத்தது சென்னை சூப்பர் கிங்ஸ்.

பெங்களூர் சின்னச்சாமி மைதானத் தில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல் தொடரின் 24 ஆவது ஆட்டத்தில், பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணியும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டோனி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தார். இதையடுத்து பெங்களூர் அணி யின் தொடக்க ஆட்டக்காரர்களாக குயின்டான் டி கொக், விராட் கோஹ்லி ஆகியோர் களமிறங்கினர். கோஹ்லி 18 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சர் துல் தாகூர் பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் டி வில்லியர்ஸ் களமிறங்கி னார். டிவில்லியர்ஸ் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினார்.

முதலில் பொறுமையாக விளையா டிய டி கொக், அதன்பின் அதிரடியாக விளையாடத் தொடங்கினார். டிவில்லி யர்ஸ் - டி கொக் ஜோடி சென்னை அணி வீரர்களின் பந்துவீச்சை நாலா புறமும் சிதறவிட்டது. சிறப்பாக விளையாடிய இருவரும் அரைச்சதம் கடந்தனர். டி கொக் 37 பந்தில் 53 ஓட்டங்கள் (சிக்ஸர், 1 பவுண்டரி) எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந் தார். இந்த ஜோடி இரண்டாவது விக் கெட்டுக்கு 103 ஓட்டங்கள் சேர்த்தது. அவரைத்தொடர்ந்து டி வில்லியர்ஸ் 30 பந்தில் 68 ஓட்டங்கள் (2 பவுண்டரி, 8 சிக்ஸர்) எடுத்து ஆட்டமிழந்தார்.

டிவில்லியர்ஸ் அவுட்டான அடுத்த பந்திலேயே, கோரி அண்டர்சன் ஆட்ட மிழந்தார். இந்த இரண்டு விக்கெட்க ளையும் இம்ரான் தாஹிர் வீழ்த்தினார். இறுதியில் மந்தீப் சிங் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். அவர் 17 பந்தில் 32 ஓட்டங்கள் ( 1 பவுண்டரி, 3 சிக்ஸர்)எடுத்து ஆட்டமி ழந்தார். பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களை எடுத்தது. சென்னை அணி சார்பில் பந்துவீச்சில் சர்துல் தாகூர், இம்ரான் தாஹிர், வெய்ன் பிராவோ ஆகியோர் தலா 2 விக் கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி ஆரம்பத்தில் இருந்தே அடித்தாடத் தொடங்கியது. என்ன விலை கொடுத்தேனும் வென்றே தீரு வது என்ற வெறி சென்னை வீரர்களின் ஆட்டத்தில் தெரிந்தது.

வட்சன் 7 ஓட்டங்களோடு நடையைக் கட்ட, அதன் பின்னர் வந்த ரெய்னாவும் 11 ஓட்டங்களோடு வீழ்த்தப்பட்டார். பில்லிங்க்ஸ், ஜடேஜாவும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. பின்னர் டோனியும், அம்பதி ராயுடுவும் இணைந்து ஆரம் பத்தில் பொறுமையாகவும் , போகப் போக அதிரடியாகவும் விளையாடத் தொடங்கினர். எப்படிப் போட்டாலும் பந்துகளை இருவரும் பவுண்டரிக்கும், சிக்ஸருக்கும் பறக்க விட்டபடி இருந், தனர். இருவரும் இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்ததுடன், அரைச் சதமும் அடித்தனர். வெற்றி நெருங்கும் சமயத்தில் அம்பதி ராயுடு 8 சிக்ஸர்கள் அடங்கலாக 84 ஓட்டங் களை எடுத்திருந்த போது ரன் அவுட் ஆனார். அதன் பின்னர் இறுதி ஓவரில் பிரவோ பவுண்டரி, சிக்ஸர் அடித்து வெற்றியிலக்கை நெருங்க, தனக்கு வந்த பந்தை சிக்ஸருக்கு பறக்க விட்டு 5 விக்கெட்டால் வெல்வதை உறுதிப் படுத்தினார் டோனி. அவர் 7 சிக்ஸர்கள் அடங்கலாக 70 ஓட்டங்களை எடுத்து, ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.(அ)



# இப்போது ஓய்வில்லை

மொஸ்கோ, ஏப்.26

"ஓய்வுக்கு என்று காலக்கெடு எதுவும் நான் நிர்ணயித்துக் கொள்ளவில்லை" என உலகின் முன்னாள் முதல் நிலை வீராங்க னையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா கூறியுள்ளார்.

மரியா ஷரபோவா ஊக்க மருந்து. சர்ச்சையில் சிக்கி 15 மாத தடைக்குப் பிறகு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் களம் திரும் பினார். ஆனால் அதன் பிறகு அவர் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை. 31 வயதான ஷரபோவாவின் ஆட்டம் முன்பு போல் சிறப்பாக இல்லாததால் அவர் ஓய்வு பெறக் கூடும் என்று பேச்சு எழுந்துள்ளது. இது குறித்து ஷரபோவாவிடம் கேட்ட போது, 'ஓய்வுக்கு என்று காலக்கெடு எதுவும் நான் நிர்ணயித்து கொள்ளவில்லை. ஓய்வு முடிவை எனது விருப்பத்தின் பேரிலேயே எடுப்பேன். அடுத்த ஒலிம்பிக் போட்டியில் 'விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் அது நடக்குமா? என்பது எனக்கு தெரியாது. தொடர்ந்து எனது ஆட்டத்தில் கவனம் செலுத்த விரும்புகிறேன்' என்றார். (அ)

# கம்பீர் விலகல்



புதுடெல்லி, ஏப்.26

ஐ.பி.எல் தொடரில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி விளையாடியுள்ள ஆறு போட்டிக ளில் ஐந்தில் தோல்வியடைந்துள்ள நிலை யில் அந்த அணியின் கப்டன் கவுதம் கம்பீர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

ஐ.பி.எல் தொடர் போட்டிகள் கடந்த 7-ம் திகதி ஆரம்பமாகின. இதில் சென்னை, டெல்லி, மும்பை, ஹைதராபாத், கொல் கத்தா, பஞ்சாப், பெங்களூர், ராஜஸ்தான் ஆகிய எட்டு அணிகள் கலந்துகொண்டுள் ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளு டன் இரண்டு முறை மோத வேண்டும். லீக் போட்டிகளின் முடிவில் முதல் நான்கு இடங் களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறும்.

இந்நிலையில், இந்தாண்டு நடைபெற்று வரும் போட்டிகளில் டெல்லி மற்றும் மும்பை அணிகள் இதுவரை விளையாடி உள்ள ஆறு போட்டிகளில் ஐந்து போட் டிகளில் தோல்வியடைந்து புள்ளிப்பட்டிய லில் கடைசி இரண்டு இடங்களில் உள்ளன.

இதையடுத்து தொடர் தோல்விகளுக்கு பொறுப்பேற்று டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் கப்டன் கவுதம் கம்பீர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அத்துடன் இந்த வருடம் ஐ.பி.எல் தொடரில் சம்ப ளமும் வாங்கமாட்டேன் என அவர் அறிவித் துள்ளார். இதையடுத்து டெல்லி அணியின் புதிய கப்டனாக ஷ்ரேயாஸ் அய்யர் நியமிக் கப்பட்டுள்ளார். டெல்லி அணி அடுத்து 27 ஆம் திகதி நடைபெற உள்ள லீக் ஆட்டத் தில் கொல்கத்தா அணியை எதிர்கொள்ள உள்ளது. புதிய கப்டன் தலைமையில் களமிறங்க இருக்கும் டெல்லி அணி இந்தப் போட்டியில் வெற்றி பெறுமா என ரசிகர் கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித் துள்ளது. (அ)

# சித்தார்த்தின் தவறு



மும்பை, ஏப்.26

சன்ரைசர்ஸ் ஹைத ராபாத் அணி வீரர் சித்தார்த் கவுல், ஐ.சி.சி விதிமீறலில் ஈடுபட்ட தாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டி யில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வீரர் சித்தார்த் கவுல் 3 விக்கெட்டுகள் வீழ்த் தினார்.

இந்தப் போட்டி யின் 16வது ஓவரை சித்தார்த் கவுல் வீசினார். அந்த ஓவரில் மும்பை வீரர் மயன்க் மார்க்கண்டே எல்பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார். அப்போது மார்க்கண்டே வின் முன்பு சென்று சித்தார்த் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். இது ஐ.சி.சி விதிமுறைப்படி முதல் தர விதிமீறல் ஆகும். இது குறித்து போட்டி நடுவரி டம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து, சித்தார்த் கவுல் தவறை ஒப்புக் கொண்டார். மேலும், அதற்கான தண்ட னையையும் ஏற்றுக்கொள் வதாக அறிவித்துள்ளார். இந்த வகை விதிமீறலுக் கான தண்டனை குறித்து போட்டி நடுவர் தான் முடிவு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கிடைத்தது விசா


கராச்சி, ஏப்.26

கடைசி நேரத்தில் விசா கிடைத் ததால் தனியாக இங்கிலாந்துக் குச் சென்றார் பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் முகமட் அமிர்.

பாகிஸ்தான் அணி அயர் லாந்து மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கிறது. இதற்காக பாகிஸ்தான் அணி ஏற்கனவே இங்கிலாந்து புறப்பட்டுச் சென்று விட்டது.

ஆனால் விசா பிரச்சினை காரணமாக வேகப்பந்து வீச்சாளர் முகமட் அமிர் மட்டும் செல்லவில்லை. அமிரின் மனைவி இங்கிலாந்துக் குடியுரிமை பெற் றவர். இதனால் அமிர் நீண்ட கால விசா கேட்டு விண்ணப்பம் செய்ததாக கூறப்படுகிறது. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இங்கிலாந்துத் தூதரகத்தில் பேச்சுவார்த்தை நடத்தி, தற்போது விசாவுக்கு அனுமதி வாங்கியுள்ளது. இத னால் அமிர் நேற்று இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றார். (அ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.